# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.187/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. சுப்பிரமணியன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of May 2024.

நான் அய்யனார்குளம்பட்டியில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் 2 வது எதிரி எனது தங்கையின் கணவர். 1 வது எதிரி 2 வது எதிரியின் தந்தை ஆவார். 08/08/2018 ஆம் தேதி எனது தங்கை முப்பிடாதியை 2 வது எதிரி சந்தேகப்பட்டதாக என் தங்கை என்னிடம் தெரிவித்ததால் அவரை எனது வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். பின்னர் ஒரு மாதம் கழித்து நான் எனது தங்கை முப்பிடாதியை எதிரிகள் வீட்டில் விடுவதற்காக 16/09/2018 ஆம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான், எனது தங்கை மணி நாடார், எனது ஆச்சி நாச்சியார், எனது மனைவியின் தாய்மாமா குழந்தை ஆழ்வார் ஆகியோருடன் எனது தங்கையும் அழைத்து சென்றோம்.

அப்போது 1 வது எதிரி எனது தங்கை அணிந்திருந்த தாலி செயினை அறுத்து எடுத்தார். அதை எனது அப்பா கேட்ட போது 1 வது எதிரி எனது அப்பாவை கையால் செவிட்டில் அடித்துவிட்டார். மீண்டும் அடிக்க முயற்சி செய்த போது நான் தடுத்தேன் அப்போது 2 வது எதிரி கம்பால் என்னை அடித்து கீழே தள்ளினார் நான் கீழே விழுந்த போது கீழே இருந்த கல் பட்டு எனது இடது தொடையில் காயம் ஏற்பட்டது.

பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த அய்யப்பன் என்னை திருநெல்வேலி அரசு

பொது மருத்துவனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார். பின்பு மருத்துவமனையில் இருந்த போது மூன்றடைப்பு போலிசார் வந்து விசாரணை செய்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். புகார் வாக்குமூலத்தில் எனது மனைவி அமுதா மற்றும் தாய்மாமா செல்வராஜ் ஆகியோர்கள் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு, அனுமதி மறுக்கப்பட்டு, எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.